



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமீரக பள்ளிவாசல்களில்
வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியிடு | ஐக்கிய அரபு அமீரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

| |
|---|
| வெள்ளிக்கிழமை ஜுமாதியுல் ஆகிர் பிறை 9 ஹிஜ்ரி 1437<br>Friday of Jumada Al Thaany 9th Hijri 1437<br>18th March 2016 |

| | |
|---|---|
| தலைப்பு: | சமூக அக்கறை! |

| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுள் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |

| |
|---|
| *இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.* |

| தலைப்பு: | சமூக அக்கறை! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! கருணையாளர்களுக்கெல்லாம் மிகப் பெரிய கருணையாளனாக இருக்கிறான். மனிதர் அனைவரிடமும் கருணையோடு இருக்க வேண்டும் என்று நம்மை ஆர்வமூட்டுகிறான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

கவனமாக கேளுங்கள்! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(57:28)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَآمِنُوا بِرَسُولِهِ يُؤْتِكُمْ كِفْلَيْنِ مِنْ رَحْمَتِهِ وَيَجْعَلْ لَكُمْ نُورًا تَمْشُونَ بِهِ وَيَغْفِرْ لَكُمْ وَاللَّهُ غَفُورٌ رَحِيمٌ

“ஆகவே, நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து, அவனுடைய இத்தூதரை (முஹம்மதை)யும் நம்பிக்கைக் கொள்ளுங்கள். உங்களுக்கு அவனுடைய அருளிலிருந்து இரண்டு பங்கு கூலி கொடுப்பான். உங்களுக்கு (நேரான வழியை அறிவிக்கக்கூடிய இந்தக் குர்ஆன் என்னும்) ஒளியையும் கொடுப்பான். அதன் பிரகாசத்தைக் கொண்டு நீங்கள் (நேரான வழியில்) செல்லலாம். (உங்களுடைய) குற்றங்களையும் உங்களுக்கு மன்னித்து விடுவான். அல்லாஹ் மிக மன்னிப்பவனும், மிக கிருபையுடையவனாகவும் இருக்கின்றான்”

**அல்லாஹ்வின் அடியார்களே**! உயர்தரமான சமூக கட்டமைப்பை இஸ்லாமிய மார்க்கம் ஏற்படுத்தியுள்ளது. சமூக மக்களிடம் மிக அக்கறையோடும், கருணையோடும் நடக்க வேண்டும் என்று அதன் ஷரீஅத் சட்ட அமைப்பு வலியுறுத்துகிறது. ஒருவருக்கொருவர் உதவி செய்தும் ஒத்துழைப்பு நல்கியும் வாழவேண்டும் என்கிறது. எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (5:2)

وَتَعَاوَنُوا عَلَى الْبِرِّ وَالتَّقْوَى

"நம்பிக்கையாளர்களே! நன்மைக்கும் (அல்லாஹ்வுடைய) இறை அச்சத்திற்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள்"

சமூக அக்கறையின் மூலம் இந்த மார்க்கம் பல்வேறு இலக்குகளை மையப்படுத்துகிறது. அதாவது, சமுதாயப் பணிகளை செய்வது, மனிதர்களிடம் நன்மையானவற்றை பரப்புவது, சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரின் பாதுகாப்பை உறுதி செய்து அவர்களின் உரிமையை வழங்குவது, இப்படி எண்ணற்ற இலக்குகளை மையப்படுத்துகிறது. ஒவ்வொருவனும் தன்னைத்தாண்டி சிந்திக்கும்போது தான் அத்தகைய சமூக நலன் ஏற்படும். அதிகம் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி அவனது கவனத்திற்கு வரும்போது சேவை மனப்பான்மை வளரும். சமூக நலனையே தமது வாழ்வின் இலட்சியமாக கொள்ள முடியும். இதனால் மனிதர்கள் தங்களுக்கிடையில் ஒருவருக்கொருவர் பாசத்தோடும் இணக்கமாக இருப்பார்கள்.

**இறைநம்பிக்கையும் கருணையும் அழகிய நற்செயலும் கொண்டவர்களே**! சமூக அக்கறை மிகவும் அவசியமானதாகும், அதன் மூலம் நன்மையானவற்றை பரப்பலாம், உண்மையான பாசத்தை வெளிப்படுத்த முடியும், தேவையுள்ளவர்களுக்கு துரிதமாக உதவ முடியும். உண்மையான ஒரு மனிதன் தமக்கு எதுவெல்லாம் நன்மை தருமோ அவற்றையே பிறருக்கும் தரவேண்டும் என்று ஆசை கொள்வான். இதனைப் பற்றி நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ الْمُؤْمِنَ مِنْ أَهْلِ الإِيمَانِ بِمَنْزِلَةِ الرَّأْسِ مِنَ الْجَسَدِ، يَأْلَمُ الْمُؤْمِنُ لأَهْلِ الإِيمَانِ كَمَا يَأْلَمُ الْجَسَدُ لِمَا فِي الرَّأْسِ

"இறை நம்பிக்கை கொண்டவர்களிடம் ஒரு முஃமீனான அடியான், ஓர் உடலில் உள்ள தலையின் மதிப்பில் இருப்பான். தலையை காப்பதற்காக உடல் வலிகளை தாங்கிக் கொள்வதைப் போன்று அந்த இறைநம்பிக்கையாளர்களுக்காக இந்த முஃமீன் வலிகளை தாங்கிக்கொள்வான்" (23580 : أحمد)

இதுவே சமூக அக்கறையாகும். பக்குவம் நிறைந்த ஒருவன் தன்னுடைய சுய அக்கறையில் மட்டும் கவனம் செலுத்தாமல் சமூகத்தின் மீதும் அக்கறை செலுத்துவான். ஒவ்வொரு தனி நபருக்கும் நன்மை செய்ய வேண்டும் என்று ஆவல் கொண்டிருப்பான். சமூக நலனிலும், அவர்களில் வாழ்க்கைத்தரம் உயர்வதிலும் கவனம் செலுத்துவான். சமூக கட்டமைப்பை மிகவும் உறுதியாக வைத்திருப்பான். நான் என்கிற அகந்தையை விட்டொழித்து அற்பணிப்பு உணர்வோடு பணி செய்வான். சமூகத்தின் ஒவ்வொரு குடிமகன்களையும் ஒருங்கிணைத்து செயல்படுவான். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

الْمُؤْمِنُ لِلْمُؤْمِنِ كَالْبُنْيَانِ يَشُدُّ بَعْضُهُ بَعْضًا

“இறைநம்பிக்கையாளர்கள் ஒருவருக்கொருவர் (துணை நிற்பதில்) ஒரு கட்டடத்தைப் போன்றவர்கள் ஆவர். அதன் ஒரு பகுதி மற்றொரு பகுதிக்கு வலுவூட்டுகிறது. (இப்படிக் கூறும்போது) நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் கைவிரல்களை ஒன்றோடொன்று கோர்த்துக் காண்பித்தார்கள்” (متفق عليه)

**தொழுகையாளிகளே**! மற்றவர்களுக்கு மனமுவந்து உதவ வேண்டும், அக்கறையோடு யாவரிடமும் பழக வேண்டும், சமூக அக்கறை கொண்டிருக்க வேண்டும் என்கிற அறிவுரையை சங்கை நிறைந்த திருக்குர்ஆன் வலியுறுத்திக் கூறுகிறது: (4:36)

وَاعْبُدُوا اللَّهَ وَلاَ تُشْرِكُوا بِهِ شَيْئًا وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا وَبِذِي الْقُرْبَى وَالْيَتَامَى وَالْمَسَاكِينِ
وَالْجَارِ ذِي الْقُرْبَى وَالْجَارِ الْجُنُبِ وَالصَّاحِبِ بِالْجَنْبِ

“அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள். தாய், தந்தைக்கு நன்றி செய்யுங்கள். (அவ்வாறே) உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அந்நிய அண்டை வீட்டாருக்கும், (எப்பொழுதும்) உங்களுடன் இருக்கக் கூடிய நண்பர்களுக்கும், பயணிகளுக்கும், உங்களிடம் உள்ள அடிமைகளுக்கும், (அன்புடன் நன்றி செய்யுங்கள்.) எவன் கர்வம் கொண்டு பெருமையாக நடக்கின்றானோ அவனை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை”

மேலுள்ள வசனத்தில் உறவினர்கள், சொந்த பந்தங்கள், பக்கத்து வீட்டில் வசிப்பவர்கள், நண்பர்கள், தேவையுள்ளவர்கள், பலகீனமானவர்கள் என சமூகத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் உதவ வேண்டும் என்கிற கட்டளை இருக்கிறது. இதனை உறுதிப்படுத்தும் விதமாக இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் தங்கள் வாழ்வியலை அமைத்துக் கொண்டார்கள். சமூகத்தில் பின்தங்கியவர்களை சம நிலைக்கு கொண்டு வந்தார்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உரிமைகளை வழங்கினார்கள், ஒதுக்கப்பட்டவர்களோடு நெருங்கி பழகினார்கள், ஏற்றத்தாழ்வு பார்க்காமல் ஒவ்வொருவருக்கும் உரிய மரியாதை கொடுத்தார்கள். எளிமையானவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு அங்கீகாரம் கொடுத்து முன்னிலைப்படுத்தினார்கள். நோய்வாய்ப்பட்டவர்களுக்கு தேவையான சிகிச்சைக்கு உதவினார்கள், ஆதரவற்ற குழந்தைகளை அரவணைத்துக் கொண்டார்கள், வாழ்வில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலும் தேறுதலும் கூறி அவர்களுக்கு புதிய உற்சாகத்தை கொடுத்தார்கள். தேவையான உதவிகளையும் செய்தார்கள்.

உதவி வேண்டும் என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நாடி யாரேனும் வந்து விட்டால் உடனடியாக அவரோடு சென்று அவருக்கு தேவையான உதவிகள் செய்து, அவருடைய துன்பங்கள் அகலும் வரை அவருடன் சேர்ந்து களப்பணியாற்றுவார்கள். இவற்றையெல்லாம் நாம் சிந்திக்கும்போது நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பணிவும், சமூக அக்கறையும், அர்ப்பணிப்பு உணர்வும், பொது நலன் மீதான வேட்கையும், பாதிக்கப்பட்டவர்கள் மீதான பாசமும் மிக தெளிவாக புலப்படுகிறது.

இதைப்போன்றே நாமும் இவர்களை பின்பற்றி நம்மிடையே சமூக அக்கறையை வளர்த்துக்கொள்ள வேண்டும். உயர்தரமான பண்பாட்டையும், மேம்பட்ட வாழ்வியல் தரத்தையும் பெற நாம் முயற்சிக்க வேண்டும். சமூக முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும், ஆற்ற வேண்டிய கடமைகளை உரிய நேரத்தில் செய்து முடிக்க வேண்டும். பொது நலனை நாடி சமூக அக்கறையோடு களப்பணி ஆற்ற வேண்டியதன் அவசியத்தை நமது ஷரீஅத் வலியுறுத்திக் கூறுகிறது. இதற்கு நாம் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முன்னோடியாக கொள்ள வேண்டும். ஆம் சிரமப்படுபவர்கள் உறவினர்களாக இருந்தாலும், தெரிந்தவர்கள் அல்லது தெரியாதவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய முன்வர வேண்டும். ஏழை எளியவர்களுக்கு தர்மங்கள் செய்ய வேண்டும் என்று பல்வேறு கட்டங்களில் வலியுறுத்தியுள்ளார்கள். அந்த ஏழைகளில் யாருக்கு அதிக தேவை இருக்கிறதோ அவருக்கே முதலில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

خَيْرُ الصَّدَقَةِ مَا كَانَ عَنْ ظَهْرِ غِنًى، وَابْدَأْ بِمَنْ تَعُولُ

“தன்னிறைவு பெற்ற நிலையில் (தேவை போக எஞ்சியதை) வழங்குவதே சிறந்த தர்மம் ஆகும். உன் வீட்டாரிடமிருந்தே (உன்னுடைய தர்மத்தைத்) தொடங்கு” (متفق عليه)

**அல்லாஹ்வின் அடியார்களே**! நம்முடைய உறவினர்களில் சிரமத்தில் இருப்பவர்களுக்கு முதலில் உதவ வேண்டும் என்று நீதமான இந்த ஷரீஅத் வலியுறுத்துகிறது. அவர்களுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்குவது, போதிய வழிகாட்டலை கூறுவது, அவர்களின் தேவையறிந்து உதவுவது, கேட்காமலே கடனுதவி செய்வது, அவர்களின் வாழ்வியல் தரம் உயர நம்மால் முடிந்த அனுசரணைகளை செய்வது போன்ற அனைத்திற்கும் இந்த மார்க்கம் கூலியை இரட்டிப்பாக்கி தருகிறது. நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

الصَّدَقَةُ عَلَى الْمِسْكِينِ صَدَقَةٌ، وَهِيَ عَلَى ذِي الرَّحِمِ ثِنْتَانِ: صَدَقَةٌ وَصِلَةٌ

“(தேவையுள்ள ஓர்) ஏழைக்கு தர்மம் செய்வதால் ஒரு தர்மம் (செய்த நன்மை) கிடைக்கும். அந்த தர்மத்தை இரத்த உறவுகளுக்கு வழங்கினால் இரண்டு நன்மை கிடைக்கும்: (அவை) தர்மம் செய்த நன்மை மற்றும் உறவோடு சேர்ந்து வாழும் நன்மை (النسائي : 2582 ، وابن ماجه: 1844)

பக்கத்து வீட்டில் வசிப்பவர்களோடு சேர்ந்து இணக்கமாக வாழ்வதும் சமூக அக்கறையின் பண்பாகும். எனவே அவர்களிடம் அக்கறையோடு பழக வேண்டும், அவர்களின் மகிழ்ச்சியான தருணங்களில் நாமும் பங்கெடுக்க வேண்டும், கவலையில் இருக்கும்போது அவர்களுக்கு ஆறுதலாக இருக்க வேண்டும், தேவையான சமயங்களில் அன்பளிப்புகள் வழங்க வேண்டும், நமது வீட்டில் சிறப்பான உணவுகள் தயாரித்தால் அவற்றில் ஒரு பங்கை அண்டை வீட்டார்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும்.

يَا أَبَا ذَرٍّ: إِذَا طَبَخْتَ مَرَقَةً فَأَكْثِرْ مَاءَهَا وَتَعَاهَدْ جِيرَانَكَ



www.sunnathwaljamath.com

“(என்னிடம்) அல்லாஹ்வின் தூதர் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "அபூதர்! நீர் குழம்பு சமைத்தால் அதில் அதிகமாகத் தண்ணீர் சேர்த்துக்கொள்வீராக. (அதன் மூலம்) உம்முடைய அண்டை வீட்டாரையும் கவனித்துக்கொள்வீராக" என்று எனக்கு அறிவுரை கூறினார்கள்” இதனை அபூதர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்” (2625 : مسلم)

இவ்வாறு அருகில் உள்ளவர்களுக்கு கொடுத்து வாழும்போது வலுவான இணக்கம் ஏற்படும். உறவுகள் மேம்படும், ஆபத்து காலங்களில் பரஸ்பரமாக ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ள முடியும். மனிதர்களிடையே நல்லிணக்கத்தையும், அன்பையும் வளர்க்க வேண்டும். எனவே யாவரிடமும் புன்முறுவலோடு பாசத்தோடு பழக வேண்டும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

تَهَادَوْا تَحَابُّوا

“நீங்கள் உங்களுக்கிடையில் ஒருவருக்கொருவர் அன்பளிப்புகள் கொடுத்து வாருங்கள். அதன் மூலம் நீங்கள் ஒருவருக்கொருவர் பாசத்தோடு வாழ்வீர்கள் (694 : الموطأ)

நம்முடைய மார்க்கம் எவ்வளவு கருணை நிறைந்தது! உள்ளங்களில் அன்பையும், நேசத்தையும் விதைக்கிறது. சமுதாயத்தின் ஒவ்வொரு தனி மனிதன் மீதும் அக்கறை செலுத்தி பாசத்தோடு அவர்களை அணைக்கிறது. அவர்கள் இணக்கமாக வாழ்வதற்கான வழிவகைகளை எடுத்துக் கூறுகிறது.

சமூக அக்கறையின் நிலையான போக்கு, ஏழையின் மீதும் கவனம் செலுத்துவதில் இருக்கிறது. பலகீனமானவர்களை அரவணைக்க வேண்டும், எளியவர்களும் வாழ்வில் ஏற்றம் பெற வாய்ப்புகளை உருவாக்கி கொடுக்க வேண்டும், தேவையுள்ள ஏழைகளுக்கு உதவ வேண்டும், அனாதைகளை ஆதரிக்க வேண்டும். எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (93:9)

فَأَمَّا الْيَتِيمَ فَلَا تَقْهَرْ

“ஆகவே, (இவைகளுக்கு நன்றி செலுத்துவதற்காக) நீங்கள் அநாதைகளைக் கடுகடுக்காதீர்கள்”

சமூக அக்கறை என்பது ஒவ்வொரு தனி மனிதனின் நலனிலும் கவனம் செலுத்துவதாகும். எனவே விலகிச் செல்பவர்களையும் அரவணைக்கும் பரந்த மனப்பான்மையை வளர்க்க வேண்டும். அனைவரையும் உள்ளடக்கும் விதமாக நன்மையானவற்றை செய்ய வேண்டும். யாருக்கேனும் பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக அனைவரும் முன்வந்து அதற்குரிய நிவாரணத்தை வழங்க வேண்டும். மகிழ்வான தருணங்களில் அனைவரும் கூட்டாக இருந்து மகிழ வேண்டும். மற்றவர்களின் துன்பங்களை நீக்குவதற்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

الْمُسْلِمُ أَخُو الْمُسْلِمِ، لاَ يَظْلِمُهُ وَلاَ يُسْلِمُهُ، مَنْ كَانَ فِي حَاجَةِ أَخِيهِ كَانَ اللَّهُ فِي حَاجَتِهِ، وَمَنْ فَرَّجَ عَنْ مُسْلِمٍ كُرْبَةً، فَرَّجَ اللَّهُ عَنْهُ بِهَا كُرْبَةً مِنْ كُرَبِ يَوْمِ الْقِيَامَةِ، وَمَنْ سَتَرَ مُسْلِمًا سَتَرَهُ اللَّهُ يَوْمَ الْقِيَامَةِ

“ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான். அவனுக்கு அநீதியிழைக்கவும் மாட்டான்; அவனை (பிறரின் அநீதிக்கு ஆளாகும்படி) கைவிட்டு விடவும் மாட்டான். தன் சகோதரனின் தேவையை நிறைவு செய்வதில் ஈடுபட்டிருப்பவரின் தேவையை நிறைவு செய்வதில் அல்லாஹ்வும் ஈடுபட்டிருக்கிறான். ஒரு முஸ்லிமின் ஒரு துன்பத்தை நீக்குகிறவரைவிட்டு அல்லாஹ்வும் (அந்த அடியானின்) மறுமை நாளின் துன்பங்களில் ஒரு துன்பத்தை நீக்குகிறான். ஒரு முஸ்லிமின் குறைகளை மறைக்கிறவரின் குறைகளை மறுமை நாளில் அல்லாஹ்வும் மறைக்கிறான்” (متفق عليه )

இவ்வாறு தேவையானவர்களுக்கு உதவுவது என்றால் எல்லாச் சூழலிலும் அதற்காக தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று பொருள். விபத்தில் சிக்கி மருத்துவமனைகளில் அனுமதிக்கபட்டவர்களுக்கும், நோயாளிகளுக்கும் தேவையான வகையில் இரத்த தானம் செய்வதும் சமூக அக்கறை நிறைந்த செயலாகும். இவ்வாறு இரத்த தானம் செய்வதற்கு மகத்தான கூலியும், அளவற்ற நன்மையையும் இறைவனிடம் கிடைக்கும். இதனால் ஒருவனின் உயிரை காப்பாற்றிய பலன் கிடைக்கும். உரிய நேரத்தில் இந்த உதவியை செய்யாவிட்டால் அதனால் ஏற்படும் இழப்பை ஈடு செய்ய முடியாது. எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (5:32)

وَمَنْ أَحْيَاهَا فَكَأَنَّمَا أَحْيَا النَّاسَ جَمِيعًا

“அன்றி, எவன் ஓர் ஆத்மாவை வாழ வைக்கின்றானோ அவன் மனிதர்கள் அனைவரையும் வாழ வைத்தவன் போலாவான்"

சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரிடமும் பாசத்தோடு பழகுபவர் நிச்சயம் பாராட்டுதலுக்குரியவர். இத்தகையவர் தமது ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் பிறருக்கு உதவும் மனநிலையை கொண்டிருப்பார். தம்மால் முடிந்த உதவிகளை மக்களுக்கு செய்து கொண்டே இருப்பார். சிக்கல் ஏற்படும் போது அவற்றை சுமுகமான முறையில் முடித்து வைப்பார். தேவையான ஒத்துழைப்புகளை கேட்காமலே தருவார். மற்றவர்களின் மகிழ்வில் பங்கெடுத்துக் கொள்வார். அவர்களுடைய கவலையை போக்க முயற்சி செய்வார். நோயாளிகளை தேடிச் சென்று ஆறுதல் சொல்லி வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பார். பெரியவர்களை மதித்து அவர்களுடைய ஆலோசனையை கேட்டு நடப்பார், சிறிவர்களிடம் கருணையோடு பழகி அவர்களை அரவணைத்துச் செல்வார்.

யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களில் நீ கருணையை வழங்குவாயாக!! நன்மையான முயற்சிகளில் எங்களை ஈடுபடுத்துவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**: இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது.

**தொழுகையாளிகளே**! யாவரிடமும் கருணையோடும், சமூக அக்கறையோடும் பழக வேண்டும். இதன் அடிப்படையில்தான் நம்முடைய அமீரக சமுதாயம் பிணைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஐக்கிய அரபு அமீரகத்தின் சமூக மக்கள் மற்றவர்களுக்கு உதவும் மன நிலையிலேயே தங்கள் வாழ்வியலை அமைத்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவசர உதவி தேவைப்படுபவர்களுக்கும் மிகவும் துரிதமாக செயல்பட்டு தேவையான உதவிகளை செய்கிறார்கள். எளியவர்கள் மற்றும் வறியவர்களின் வாழ்க்கைத்தரம் உயர உரிய வாய்ப்புகளை உருவாக்கி கொடுக்கிறார்கள். பின்தங்கியவர்களை அடையாளம் கண்டு அவர்களையும் முன்னிலைக்கு கொண்டு வருகிறார்கள்.

قَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم :عَلَى كُلِّ مُسْلِمٍ صَدَقَةٌ. قِيلَ: أَرَأَيْتَ إِنْ لَمْ يَجِدْ؟ قَالَ :يَعْتَمِلُ بِيَدَيْهِ فَيَنْفَعُ نَفْسَهُ وَيَتَصَدَّقُ. قِيلَ: أَرَأَيْتَ إِنْ لَمْ يَسْتَطِعْ؟ قَالَ:يُعِينُ ذَا الْحَاجَةِ الْمَلْهُوفَ

“தர்மம் செய்வது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கடமையாகும்" என்று நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அதற்கு தோழர்கள், “இறைத்தூதர் அவர்களே! (தர்மம் செய்வதற்கான பொருள்) ஏதும் கிடைக்காவிட்டால்...?” எனக் கேட்டனர். அதற்கு நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “ஏதேனும் கைத்தொழில் செய்து, தாமும் அதன் மூலம் பலனடைந்து, தர்மமும் செய்ய வேண்டும்" என்றார்கள். மறுபடியும் தோழர்கள், “அதுவும் முடியவில்லையாயின்” எனக் கேட்டதற்கு, “தேவையுடைய, உதவி தேடி நிற்கும் துயருற்றவர்களுக்கு உதவ வேண்டும்" என்று பதிலளித்தார்கள். மீண்டும் தோழர்கள், “அதுவும் இயலாவில்லையாயின்" என்றதும் “நற்காரியத்தைச் செய்து தீமையிலிருந்து தம்மைத் தடுத்துக் கொள்ள வேண்டும். இதுவே அவர் செய்யும் தர்மமாகும்!" எனக் கூறினார்கள். (متفق عليه)

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

“ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்க்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்க்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!



www.sunnathwaljamath.com

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக!

மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).



www.sunnathwaljamath.com